பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 17 சனிக்கிழமை 03.12.2022 கதிர் 28

**இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தை யாழ் மாநகர சபையின் கட்டுப்பாட்டில் விடாது, அதனைக் கைப்பற்றிக் கொள்வதில் கொழும்பு ஆட்சிப் பீடம் முழு முனைப்பாக இருக்கின்றது.

ஆனால், அதே அளவுக்கு அதை கொழும்பிடமல்ல,

2

# கானல்நீர்க் கனவாகிறது பேச்சின் மூலமான தீர்வு!

## இயலாமையை ஒப்புக்கொள்ளும் சம்பந்தன் சர்வதேசத்தின் அழுத்தத்தைக் கோருகிறார்



**தமிழரின் அரசியல் அபிலாஷைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்பது கானல் நீராக மாறிக்கொண்டிருக்கும் கனவு. தமிழர்களுக்கு எந்த லாபமும் கிடைக்கவில்லை. உண்மையில், வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் தொகை மற்றும் கலாச்சார மாற்றங்கள் காரணமாக அவர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகளால் பெரிய அளவில் முன்னேற முடியவில்லை.**

**- இவ்வாறு இயலாமையை ஒப்புக் கொள்ளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அனைத்துலக சமூகம் தலைமை தாங்கி வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு ஏற்பாட்டிற்கு அழுத்தம் கொடுப்பது கடமையாகும் என்று வேண்டுகிறார்.**

12

## தேர்தல் என்றாலே மொட்டுக்குப் பயம்

### சம்பிக்க ரணவக்க கூறுகிறார்



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் ஆணைதற்போதுஇல்லை. அதனால்தான் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றது. என 43 ஆம் படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

'ராஜபக்ஷக்களின் 'மொட்டு'க் கட்சிக்குக் கடந்த தேர் தல்களில் வழங்கப்பட்ட மக்கள் ஆணை இப்போதும் இருக்கின்றதா?' என்று எழுப்பப்பட்ட

2

## இலங்கை விடயத்தில் தீர்வுக்காக பிரிட்டன் இந்தியாவுடன் சேர்ந்து செயற்படுகின்றதாம்

### பிரபுக்கள் சபையில் அமைச்சர் தாரிக் அஹமட் தகவல்

லண்டன்,டிசெ.03

இலங்கை விவகாரங்களிற்கு தீர்வை காண்பதற்காக இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் பிரபுக்கள் சபை இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்ந் துள்ளது. இதன்போது பிரிட்டனின் வெளி விவகார பொதுநலவாய அபிவிருத்தி அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு இலங்கை குறித்து எழுப்பப்பட்ட கேள் விகளிற்கு பதிலளித்துள்ளார்.

இவர் இலங்கை விவகாரத்தில் இந் தியா ஆற்றிவரும் முக்கிய பங்களிப்பை சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை விவ காரங்கள் குறித்து பிரிட்டன் தொடர்ந்தும் கரிசனையுடன் கவனத்துடன் இருக்கும் என தெரிவித்துள்ள அவர் இலங்கை மனிதாபிமான விவகாரங்களை எதிர் கொள்வதற்கு பிரிட்டன் உதவும் என வும் தெரிவித்துள்ளார்.



## பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை கட்டுப்படுத்த விசேட செயலணி தயாராகிறது!


பாடசாலைகளில் போதைப்பொருள் பயன்பாட்டை தடுப்பதற்கு விசேட செயலணியொன்றை ஸ்தாபிக்கின் றமை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவித்த பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெட்டியாராச்சி, மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கு மேலதிகமாக குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் பாடசாலை மாணவர் கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித் துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஏனைய கட மைகளில் இருந்து நீக்கப்பட்டு, எதிர்காலத்தில் போதைப் பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றங்களில்

2

## கிளிநொச்சி கந்தன்குளத்தில் இளைஞனின் சடலம் மீட்பு



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட விநாயகபுரம் கந்தன் குளத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று இன்று (12) மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மல்லாவி ஐயங்கன்

2

## எமது மக்களின் காணிகளைக் காடுகளாக மாற்றி காணி பிடிப்பதுதான் இப்போது இடம்பெறுகிறது

### நாடாளுமன்றத்தில் அங்கஜன் இராமநாதன் நேற்று விசனம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.03

எமது மக்களுடைய காணிகளை காடுகளாக மாற்றி காணி பிடிப்பதுதான் இப்போது இடம்பெறுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வனஜீவராசி கள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுச் தொடர்பான குழு நிலை விவாதத்தில் அவர் இவ்வாறு உரையாற்றினார்.

தனது உரையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது மக்களுக்கு நீண்டகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகளில், காணிப் பிரச்சினையும் பிரதானமானது. எமது மக்களின் பூர்வீக நிலங்கள் பல திணைக்களங்களால், பல நபர்களால், பல வடிவங்களில் ஒரு நிகழ்ச்சி

2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாநகர சபையிடம்தான் கையளித்து, அதன் நிர்வாகத்தில் நிரந்தரமாக இருக்கச்செய்வதை உறுதிப்படுத்துவதில், அந்த கலாச்சார மண்டபக் கட்டமைப்பை இன்றைய இலங்கை நாணய பெறுமதியில் சுமார் ஆயிரத்து இருநூறு கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் கட்டமைத்து, அன்பளிக்கும் இந்தியா மிகக் கவனமாக இருக்கின்றது.

இந்தக் கலாசார மண்டபக் கட்டமைப்புத் தொகுதி கட்டி முடிக்கப்பட்டு வருடம் கடந்து விட்டது. அதைத் திறந்து வைத்துக் கையளிப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருவார் என்றும் கூட எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால்,அதைத் தொடர்ந்து நிர்வாகிப்பதற்கான கட்டமைப்பு ஏற்பாடுகளைச் செய்யாமல் அதை கையளிக்க முடியாது என்ற இக்கட்டில் இந்தியா உள்ளது.

இந்தக் கட்டமைப்பு யாழ் மாநகர சபைக்கு சொந்தமான நிலத்திலேயே கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. வடக்கில் மிக உயர்ந்த கட்டமைப்பாகவும் அது மிளிர்கின்றது.

இதை அன்பளிப்பாக நிர்மாணித்து, யாழ் மாநகர சபையிடம் கையளிப்பது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் இந்த அன்பளிப்புக் கட்டட வேலையை அத்துணை நிதிச் செலவில் இந்தியா ஆரம்பித்தது.

இப்போது கட்டடம் பூர்த்தியாகிவிட்டது. அதை நிர்வகிக்கும் ஆளணி, அம்பு, நிதி வசதிகள் யாழ் மாநகர சபையிடம் இல்லை, அதனால் அதனை இலங்கை அரசிடம் ஒப்படையுங்கள் என்று கொழும்பு அழுத்தம் தருகிறது. கொழும்பில் தாமரை தடாக மண்டபக் கட்டமைப்பை இலங்கை நாடாளுமன்றச் சட்டம்மூலம்நிறுவப்பட்டஒருகட்டமைப்பின் கீழ் கையாள்வது போல, இதையும் கொழும்பு அரசினால் கையாளலாம் என்பது தென் இலங்கை ஆட்சிப் பீடத்தின் திட்டம். அப்படி நடந்தால் இக்கட்டமைப்பு யாழ் மாநகர சபையின் கையை விட்டுப் போய்விடும். அதை இந்தியா விரும்பவில்லை.

இது யாழ் மக்களுக்கான இந்தியாவின் உரிமையுடன் கூடிய நன்கொடை; அன்பளிப்பு; காலாதி காலமாக நிமிர்ந்து நின்று யாழ். - இந்திய நட்புறவைப் பறைசாற்றப் போகின்ற ஓர் உணர்வுபூர்வமான வெகுமதி.

அதனால், என்ன செலவானாலும் இக்கட்டமைப்பு யாழ் மாநகர சபையின் கீழ்இருப்பதையேஇந்தியாவிரும்புவதாக தெரிகிறது. அதனால் மாநகர சபையிடம் போதிய நிதி வசதி, ஆளணி இல்லாவிட்டால், அடுத்த ஐந்து வருடங்களுக்கு கட்டமைப்பை நிர்வகிப்பதற்கான நிதி மற்றும் வசதிகளை நேரடியாகத் தந்து உதவும் தாராளத்துக்கு இந்தியா இணங்கி இருக்கின்றது. அதற்குள் யாழ் மாநகர சபை தானே நிர்வகிக்கும் நிலைக்குத் தன்னைத் தயார் படுத்தி விடும் என இந்தியா நம்புகிறது.

அப்படி இருந்தும் அந்தக் கட்டமைப்பைத் தன் பொறுப்பில் கொண்டு வருவதில் கொழும்பு ஆட்சி பீடம் விடாமுயற்சியுடன்முனைப்பாகஎத்தனித்துவருகிறது.

இக்கட்டிடம் தொடர்பான விடயங்களை முடிவெடுப்பதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் ஓர் உயர்மட்டக் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

இந்தியத் தூதுவர், இந்தியாவின் யாழ். துணைத் தூதுவர், கொழும்பின் பொறுப்பான மத்திய அமைச்சர், வடக்கு ஆளுநர், யாழ் மாநகர சபை முதல்வர் போன்ற பலர் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்.

அங்கும், இந்தக் கட்டமைப்பை நாடாளுமன்றச்சட்டத்தின்கீழ், இலங்கை மத்திய அரசிடம் ஒப்படைக்கும் படி கொழும்புத் தரப்பு வற்புறுத்தியது. ஆனால் இந்தியா விட்டுக் கொடுக்கவில்லை. ஒப்பந்தப்படி அது மாநகர சபையிடம்தான் ஒப்படைக்கப்படும், அடுத்த ஐந்து வருடங்களுக்கு மாநகர சபை அதை நிர்வகிப்பதற்கான வழிகாட்டல் ஒத்துழைப்பு, நிதிப் பங்களிப்பு, நிர்வாக உதவிகள் போன்றவற்றை தொடர்ந்து வாரி வழங்க இந்தியா முனைப்பாக இருப்பதாகத் தெரிகிறது.

இது பற்றி தொடர்ந்து ஆராய்வதற்காக வரும் 22 ஆம் திகதி அடுத்த கூட்டம்.

இதற்கிடையில் கூட்டத்தில் பங்குபற்றிய ஒரு தரப்பு, யாழ் முதல்வருக்கு ஒரு சின்ன 'அட்வைஸ்' கொடுத்ததாகத் தெரிகின்றது.

"தீர்க்கமான முடிவுகளை எடுத்து, இந்தக் கட்டமைப்புத் தொடர்ந்தும் மாநகர சபையிடம்இருப்பதைஉறுதிப்படுத்தாமல் வேறு முடிவுகளுக்குக் இணங்கி விடாதீர்கள்! உங்களின் பதவிக்காலம் இன்னும் மூன்று மாதங்கள் கூட இல்லை. அதற்குள் அவசரப்பட்டு, ஏதேனும் ஓர் இணக்கத்தை கண்டு, நீங்கள் முன்னுக்கு நின்று, இந்த கட்டமைப்பை நீங்களும் சேர்ந்து திறந்து வைத்து விட வேண்டும் என்ற அவசரத்துக்காக கண்மூடித்தனமான உடன்பாட்டுக்கு போய்விடாதீர்கள். அப்படி போனால் யாழ் மாநகர சபையின் நிலத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் இந்தக் கட்டடம் யாழ்ப்பாண மக்களிடம் இருந்து தள்ளிப் போய்விடும். ஆகவே புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுங்கள்!'' என்று அட்வைஸ் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனாலும் தன்னுடைய பதவி காலத்தில் ஏதோ வெட்டிப் பிடுங்கியவர் போல சாதனைகளைப் பதிந்து செல்லும் துடிப்பிலிருக்கும்முதல்வர்மணிவண்ணனின் காதில் இந்த ஆலோசனை சரியாக ஏறுமோ என்னவோ...!

வரலாற்றுத் தவறு இழைத்து விட வேண்டாம் என்பதை மட்டும் அவருக்குச் சொல்லி வைப்பது யாழ். சமூகத்தின் கடமை.

- மின்னல் -

## தேர்தல் என்றாலே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்களின் தற்போதைய நிலைப்பாட்டை அறிவதற்கு தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

2018 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தியபோதுதான் தெரிந்தது மக்கள் இருப்பது 'மொட்டு'வின் பக்கம் என்று. அதேபோல், அடுத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலும் விரைந்து நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் ஆணை யாருக்கு எனபதை அனைவரும் அறியமுடியும்.

எனினும், கடந்த முறை போல் இம்முறையும் மக்கள் ஆணை கிடைக்காது என்ற அச்சத்தில்தான் தேர்தலை நடத்துவதற்கு அரசு தயங்குகின்றது - என்றார்.

## பாடசாலைகளில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடும் குழுக்களுக்கு எதிராக மாத்திரம் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் சுமார் 1100 முதல் 2000 கிலோ கிராம் வரையான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்திலேயே ஹெரோயின் போதைப்பொருள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாகவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் சமூகத்தினரிடையே பல்வேறு போதைப் பொருள்களை விநியோகிப்பதற்கான திட்டங்கள் கடத்தல்காரர்களினால் ஆரம்பித்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தைச் சேர்ந்த பகிரதன் சுமன் என்ற 21 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவானின் அனுமதியுடன் சடலம் மீட்கப்பட்டு, உடல் கூறு பரிசோதனைகளின்பின்னர்உறவினரிடம்ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# யானைகள் பதிவுப் புத்தகத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்க பணிப்பு

யானைகளைப் பதிவு செய்யும் 'யானை புத்தகம்' எனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு மேன்முறையீட்டுநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யானைகளை பதிவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்கள் சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர டங்கிய ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அடுத்த 10 நாள்களுக்குள் இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## எமது மக்களின் காணிகளைக் காடுகளாக மாற்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரலில் சூறையாடப்படுகின்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாட்டை தவிர்க்க இலங்கையின் 30 வீத நிலப்பரப்பை கொண்ட வட கிழக்கின் விவசாயத்தின் மூலம், உணவு உற்பத்தியை அதிகரித்து, நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டை தீர்க்க வாய்ப்புகள் உள்ளன. இருந்தும் ஒரு சில தரப்பினருடைய அசமந்தப் போக்கினால் மாவட்ட, மாகாண, அல்லது ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் பயன்படாமல் வீணடிக்கப்படுகிறது.

யுத்தம் நடந்த பகுதியாக இருந்தாலும் அழிக்கப்படாத காடுகள் வடக்கில் இன்றும் உள்ளன. அவற்றைப் பாதுகாப்பதை விட இப்போது மக்களுடைய காணிகளை காடுகளாக மாற்றி காணி பிடிப்பதுதான் இடம்பெறுகிறது.

இவற்றை தீர்க்க நாம் ஆராய்ந்த பொழுது, Google Map / GPS முறையில் காணிகளை அடையாளப்படுத்துவதே தவறு ஏற்பட காரணமென பல கூட்டங்களில் உணரப்பட்டது.

கடந்த காலங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மணலாற்றில் நடந்ததைப் போன்று தற்போதைய வனப்பாதுகாப்பு ரீதியான காணி அபகரிப்புகள் மீதும் மக்களுக்கு அச்சம் உள்ளது. அவை விடுவிக்கப்படும் என காலத்துக்கு காலம் மாறும் அத்தனை அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் சொல்லிக் கொண்டாலும் முழுமையாக தீரவில்லை.

கடந்த காலங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள் நேரடியாக யாழ் மாவட்டத்துக்கு வருகைதந்த போதும், இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டும், இன்னும் தீர்வுகள் இல்லை. அவற்றை செயற்படுத்தும் பொறுப்பில் உள்ள அதிகாரிகளின் அசமந்த போக்கே இதற்கு காரணமாகும்.

கடந்த ஆண்டு நீதிக்கான அணுகல் சந்திப்பின்போதும் எமது வலிவடக்கு, மருதங்கேணி, நெடுந்தீவு, முல்லைத்தீவு பிரதேச செயலாளர்களால் இவ்விடயத்தின் அவசியம் கூறப்பட்டது. துறை சார்ந்த அமைச்சர்களும், அதிகாரிகளும் அதனை ஏற்று, அதற்கான நிவர்த்தியை செய்ய கால அவகாசம் கோரியும் அரசியல் குழப்ப நிலை அதை மேலும் நீடித்துள்ளது என்றார்.

எமது மக்களின் காணிப் பிரச்சினையில் உயர் பாதுகாப்பு வலயம், விமான நிலைய வலயம், வன ஜீவராசிகள் வனப் பாதுகாப்பு திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகிய பிரதான காரணிகளோடு தொடர்புபடுகின்றன.

வலி வடக்கு பிரதேச மக்களின் வாழ்வியல் நிலங்களும், விவசாய நிலங்களும் விடுவிக்கப்படாத நிலை இன்னமும் தொடர்கிறது. யாழ்.மாவட்டத்தில் இதுவரை 20 ஆயிரத்து , 822 ஏக்கர் காணி பல கட்டங்களில் விடுக்கப்பட்டுள்ளது. இன்னமும் 3ஆயிரத்து 27 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்பட வேண்டி உள்ளது.

பாதுகாப்பு தரப்பால் யாழ் மாவட்டத்தில் விடுவிக்கப்பட வேண்டிய வீதிகள்:-

* தெல்லிப்பளை - அச்சுவேலி (கட்டுவன் சந்தி - வசாவிளான் B 437)
* பலாலி வீதி (வசாவிளான் மகாவித்தியாலம் - பலாலி சந்தி AB18)
* காங்கேசன்துறை - கீரிமலை வீதி (இலங்கை கடற்படை பயன்படுத்தியது AB 21)
* பலாலி வீதி (B 420)

பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்படும் பாடசாலை காணிகள் மற்றும் கட்டிடங்கள்:-

* வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்,
* மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
* கேகேஎஸ் மகா வித்தியாலயம்
* கே.கே.எஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
* பலாலி சித்திவிநாயகர் வித்தியாசாலை
* பலாலிஅரசதமிழ்கலவன்பாடசாலை

(11ஆம் பக்கம் பார்க்க)



காலைக்கதிர் Kalaikkathir

# கசிப்பு உற்பத்தி நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி காட்டுப்பகுதியில் இயங்கிவந்த பாரியளவிலான கசிப்பு உற்பத்தி நிலையம் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்களத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் சட்ட விரோத போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை இலங்கை மதுவரித்திணைக்களம் முன்னெடுத்துவருகின்றது.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோத போதைப்பொருள் பாவனையை மற்றும் உற்பத்திகளை தடுக்கும் வகையிலான நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.ரஞ்சனின் தலைமையில் வாகனேரிப்பகுதியில் உள்ள குளத்துமடு காடுகளில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது மறைவான நிலையில் பாரியளவில் கசிப்பு உற்பத்திசெய்யும் இடம் முற்றுகையிடப்பட்டது டன் அங்கிருந்து பெருமளவு கோட்டாக்களும் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள அதேநேரம் மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஐந்து பேர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டனர் என மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.



இதன்போது ஐந்து பரல்கள் கோடா மீட்கப்பட்டதாகவும் ஒரு பரலில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் மில்லி லீற்றர் அடிப்படையில் ஐந்து பரல்களிலும் 7 லட்சத்து 50 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று 3 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு உடைமைகளில் வைத்திருந்ததற்காக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கைதுசெய்யப்பட்ட ஆறு பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு பொதுமக்கள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அத்தியட்சகர் முன்வைத்துள்ளார்.

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா ஓராண்டு பூர்த்தி!

யாழ்ப்பாணம் – ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழாவின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு ஆரியகுளத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 6.30மணி முதல் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆரியகுளத்தின் மையப்பகுதியிலே அமைக்கப்பட்ட விசேட அரங்கிலே கலை நிகழ்வுகள், வாண வேடிக்கைகள், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் 2021 டிசெம்பர் 2ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

# பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிப்பதற்கு ஆலோசனைகள்!

## பெருந்தோட்ட அமைச்சர் முன்வைப்பு

பெரும் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்பிக்கப்படவுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

# வடக்கு, கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நிதியுதவி!

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 6 லட்சத்து 48 ஆயிரத்து 148 அமெரிக்க டொலர்களை சுரங்க ஆலோசனைக் குழு வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம், ஜப்பானின் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் சுரங்க ஆலோசனைக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்டி மெக்லென்னன் ஆகியோருக்கு இடையில் மானிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானின் உதவியுடன் சுரங்க ஆலோசனைக் குழுவால் அமுல்படுத்தப்பட்ட 14 ஆவது கண்ணிவெடி அகற்றும் திட்டம் இதுவென ஜப்பானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த புதிய திட்டம் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மேலதிகமாக 2 லட்சத்து 59 ஆயிரத்து 464 சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றவுள்ளது.

இந்த அகழ்வாராய்ச்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பான நிலங்களாக மாற்றுவதுடன், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 7 ஆயிரத்து 424 பேரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, முந்தைய 13 திட்டங்கள் 15 ஆயிரத்து 831 கண்ணிவெடிகள் மற்றும் பிற வெடிகுண்டுகளை அகற்றியுள்ளன என்றும் ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

# அங்கவீனமுற்ற நபர்களுக்கான மாவட்ட மட்ட அமைப்பு நிறுவல் தொடர்பான கலந்துரையாடல்!



பயர் மெட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான மாவட்ட மட்ட அமைப்பை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான அமைப்பை மாவட்ட மட்டத்தில் நிறுவும் வகையில் பிரதேச செயலக மட்டத்தில் இயங்கி வருகின்ற மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் அங்கத்தவர்களை உள்ளடக்கி யாப்பின் விளக்கம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன் அமைப்பின் பெயரைத் தெரிவு செய்தல், உள்வாங்கப்படும் அங்கத்தவர்கள், பணிகள்,நோக்கம், எதிர்பார்ப்புக்கள், செயன்முறைகள், அமைப்பின் நிர்வாக அங்கத்தவர் களை தெரிவு செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர், பயர் மெட் நிறுவன உத்தியோகத்தர், மாவட்ட செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# துறைமுக அதிகார சபையில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை கண்டறியக் குழு!

இலங்கை துறைமுக அதிகார சபையில் இடம்பெற்ற ஊழல் மற்றும் முறைகேடுகளை கண்டறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவில் மூவர் உள்ளனர்.

அதன்படி, எம்.டி.எஸ்.ஏ.பெரேரா, காமினி குமாரசிறி மற்றும் கேஜிபி வசந்த கமகே ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய தரப்பினரும் இந்தக் குழுவிற்கு அதிகார சபையில் இடம்பெற்றனர் எனக்கூறப்படும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குழுவிற்குக் கிடைத்த அனைத்து முறைப்பாடுகளையும் விசாரித்து, குழுவின் அறிக்கை 6 மாதங்களுக்குள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன் சந்திரா தெரிவித்தார்.

# யாழ். மாநகர சபையின் செயற்பாட்டிற்கு எதிராக 3 ஆவது நாளாகவும் தொடர்ந்தது போராட்டம்!

கல்லூண்டாயில் யாழ். மாநகர சபையினர் குப்பை கொட்டுவதற்கு எதிராக வலி. தென்மேற்கு பிரதேசசபையினரால் கல்லூண்டாய் வைரவர் ஆலயத்திற்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியாள்ள நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) மூன்றாவது நாளாகவும் நடைபெற்றது.

புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை யாழ். மாநகர சபையினர் வழமையாக குப்பை கொட்டும் கல்லூண்டாய் பகுதிக்கு குப்பை கொட்டுவதற்காக வந்தவேளை, குப்பைகளை ஏற்றிவந்த எட்டு வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டதுடன் ஏனைய வாகனங்கள் திரும்பிச் சென்றுள்ளன. ஆனால் நேற்று எந்த குப்பை ஏற்றும் வாகனங்களும் வர வில்லை.

யாழ். மாநகர சபையினர் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நிலையில் குப்பை வண்டிகளை வழிமறித்து போராட்டம் நடாத்துவதற்கு மல்லாகம் நீதிமன்றத்தால் இடைக்கால தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இந்நிலையில் மூன்றாவது நாளாகவும் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# 2026 இற்குள் நெருக்கடிகளுக்குத் தீர்வு கண்டு முந்தைய நிலைமைக்குத் திரும்புவதே இலக்கு!

## என்கிறார் செஹான் சேமசிங்க

2026 ஆம் ஆண்டை நெருக்கடிக்கு முந்தைய வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்லும் நோக்குடன் அரசாங்கம் செயற்படுவதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் மாநாட்டில் இடம்பெற்ற நேர்காணலின் போது இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

1948 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது.

இதற்குத் தவறான பொருளாதாரக் கொள்கை மற்றும் சுற்றுலாத்துறையை முற்றாகசெயலிழக்கச்செய்த கொரோனாத் தொற்று என்பன காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சீனாவின் அத்துமீறல்

இலங்கை விவகாரத்தில் சீனாவின் முறையற்ற நடவடிக்கைகள், தலையீடுகள் தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றன.

ஒரு நட்புறவு தேசம் என்ற எல்லையைக் கடந்து, அது அத்துமீறி நடந்து வருவது கண்கூடு.

வடக்கு மக்களின் விருப்புக்கு மாறாக, வடக்கில் காலூன்றி, அதன் மூலம் நமது உடனடி அயல் தேசமான இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறுவதற்கு சீனா நகர்த்தி வரும் காய்கள் தெரிந்தவையே. அதனால் இயல்பாகவே சீனாவுக்கு எதிரான கடும் உணர்வலைகள் வடக்கு, கிழக்குத் தமிழர்களிடையே எழுந்து வருவது வெளிப்படையானது.

தமிழர்களுக்கு எதிரான உரிமை மீறல்களுக்கும், போர்க் குற்றங்களுக்கும் காரணமாக – உதவித் தரப்பாக – விளங்கிவரும் சீனா, இவ்விடயங்களில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு நீதி, நியாயம் கிடைப்பதற்காக சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், முயற்சிகள் போன்றவற்றுக்கும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றது என்பது பகிரங்க உண்மையே. இதனால் சீனா மீது தமிழர்கள் செம கோபத்தில் இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் இந்தக் கோபத்தை அவர்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் பிரதிபலித்து வருகின்றனர். அது இயல்பானது. முறையானது.

ஆனால் அந்த நடவடிக்கைக்கு எதிராக முறையற்ற விதத்தில், இராஜதந்திரப் பண்பியல்புகளை மீறி, பிரதிபலிப்பைக் காட்டுகின்றது சீனா.

'சீனா உண்மையில் இலங்கையின் நண்பன் அல்ல, ராஜபக்ஷக்களின் நண்பன்தான்' என்ற உண்மையை தமிழர் தரப்பின் நாடாளுமன்ற பிரதிநிதி சாணக்கியன் நாடாளுமன்றத்தில் போட்டு உடைத்தார்.

அதுதான், இது போன்ற விடயங்களை அவர் பேச வேண்டிய அரங்கு. அங்கு பேசினார். பேசித்தானாக வேண்டும்.

அதற்காக, கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தனது ட்விட்டர் செய்தியில், அவரை ஒட்டி பல செய்திகளை பகிரங்கமாக வெளியிடுகின்றது. சாணக்கியனின் ட்விட்டர் கணக்கில் அவற்றைத் தொடர்ந்து இணைத்துத் தொல்லை கொடுக்கின்றது.

இது ராஜதந்திர ரீதியில் முறையற்ற நடவடிக்கை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தனது நாட்டின் நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரையின் மீது அந்நிய நாடு தவறாக இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகித்து – செல்வாக்கைச் செலுத்தி – அந்த உறுப்பினரின் கருத்துச் சுதந்திர உரிமையில் – நாடாளுமன்றத்தில் உரையாற்றும் சிறப்புரிமையில் – தலையிடுவது மிகப்பெரிய ஜனநாயக அத்துமீறலாகும்.

சாணக்கியனின் உரைகள் தொடர்பில் சீனாவுக்கு ஏதேனும் நீதி, நியாயமான அசௌகரியம் இருக்குமாயின், ராஜதந்திர ரீதியில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூலம், நாட்டுக்கு நாடு என்ற அடிப்படையில், ஊடாடி விடயத்தைப் பகிரங்கமாக்காமல் கையாள்வதே முறையாகும்.

அதை விடுத்து, இங்குள்ள சீனத் தூதரகம், இலங்கை விவகாரத்தில் நேரடியாக ஈடுபட்டு, பகிரங்க அரசியல் செய்யக்கூடாது; செய்ய அனுமதிக்கவும் கூடாது.

சீனாவின் செயற்பாடு ராஜதந்திர மரபுகளைத் தாண்டிய அத்துமீறலாகும்.

# வரி விதிக்கும் யோசனைகள் எதிர்காலத்தில் நிலைமையை மேலும் மோசமடையவைக்கும்!

## ஹரிணி அமரசூரிய எச்சரிக்கை



இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்துக்கு சத்தான உணவை உண்பதற்கு ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுகின்றது.

ஆகவே எத்தனை குடும்பங்களுக்கு இவ்வாறான வருமானம் கிடைக்கின்றது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளை சுட்டிக்காட்டி நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

ஒரு லட்சம் ரூபா வருமானம் பெறுபவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக வரி விதிக்கும் யோசனை, எதிர்காலத்தில் நிலைமையை மோசமாக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

# 200 கோடி அமெரிக்க டொலர்களைப் பெறுவதற்கு உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சு!

சுமார் 200 கோடி அமெரிக்க டொலர்களை பெறுவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை கலந்துரையாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் 290 கோடி அமெரிக்க டொலர் திட்டத்துக்கான ஊழியர் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளது.

கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை நிறைவு செய்து ஜனவரியில் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியைப் பெறுவதற்கு இலங்கை முயற்சி மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, ஐ.எம்.எவ். அனுமதி கிடைத்தவுடன், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பலதரப்பு கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு மீண்டும் கடன் வழங்க முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 120 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, கொள்கைக் கடனொன்றின் மூலம் இலங்கைக்கு கிட்டத்தட்ட 70 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்குமெனக் குறிப்பிட்டார்.

ஜப்பான் அரசாங்கமும் நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளதாகவும், பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு இவ்வாறான கடன்கள் வழங்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

# நாட்டில் இந்து மதத்தின் தனித்துவத்தை பாதுகாப்பது தொடர்பாக ஆராயவேண்டும்

## ஜனாதிபதி ரணில் கூறுகின்றார்



இந்தியாவுடன் ஒப்பிடும் போது இலங்கையில் இந்து மதத்தின் தனித்துவத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்துக்கள் மட்டுமன்றி பௌத்த விகாரைகளிலும் இந்து தெய்வங்களை வழிபடுகின்றார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சிவ வழிபாடு பொதுவானது என்பதுபோல தெற்கில் விஸ்ணு, கந்தன், பத்தினி உள்ளிட்ட ஏராளமான இந்து தெய்வங்களை வழிபடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள இந்து மதத்தைவிட இலங்கையில் உள்ள இந்து மதத்தின் தனித்துவம் தொடர்பாக ஓர் அறிக்கையை தொகுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதேபோல், இலங்கை வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வரலாற்றை மறந்துவிடுகிறோம் என்றும் எனவே, வரலாறு தொடர்பான அறிவையும் ஆராய்ச்சியையும் முன்னெடுப்பதற்காக இந்த நிறுவனம் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியுள்ள 77 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் சுற்றுலா விசாவில் தங்கியுள்ள 77 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுக்கள் அந்தந்த நாடுகளுக்கு பயணிக்கவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, மனிதக் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஓமானுக்கான இலங்கைத் தூதரகத்தின் முன்னாள் மூன்றாம் செயலாளர் ஈ.குஷான் என்பவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஒதியமலைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு!

ஒதியமலைப் படுகொலையின் 38 ஆவது நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 1984 ஆம் ஆண்டு இதே நாளில், ஒதியமலைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்திலுள்ள நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வில், நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக் கற்களுக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலிகளில் ஈடுபட்டனர். இதனையடுத்து அஞ்சலிக் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், கனகையா தவராசா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன் ஆகியோருடன் படுகொலை செய்யப்பட்டவர்களுடைய உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி பாரதியார் பிறந்த தினம்!



*யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 140 ஆவது பிறந்த தின நிகழ்வு எதிர்வரும் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற உள்ளது.*

*அணிசெய் பேச்சாளர்களாகப் பேராசிரியர் சிறி பிரசாந்தன், இ.வாசுதேவா, ந.விஜயசுந்தரம், செந்தமிழ் சொல்லருவி க.லலீசன் ஆகியோர் பங்குபற்றி தமது வாதங்களை முன்வைப்பார்கள்.*

# இலங்கையுடன் கைகோர்க்குக மாலைத்தீவுக்கு ரணில் அழைப்பு

இலங்கையின் உயர்தொழில்நுட்ப விவசாயத் துறையில் முதலீடு செய்யுமாறு, மாலைத்தீவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மாலைதீவு துணை ஜனாதிபதி பைசல் நசீம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று(வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பைக் கருத்திற் கொண்டு விடுக்கப்பட்ட அழைப்பின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இலங்கையின் உயர் தொழில்நுட்ப விவசாயத் துறை, கப்பல் சுற்றுலா மற்றும் உயர்நிலை சுற்றுலா துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள மாலைத்தீவுக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இந்த பிராந்தியத்தில் அதிகரித்து வரும் போதைப் பொருள் அச்சுறுத்தல் குறித்தும் ஜனாதிபதி ரணில் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போதைப்பொருள் கொள்ளைக்கு எதிராக மாலைதீவின் உதவியை நாடினார்.



காலைக்கதிர் Kalaikkathir





# யாழ். பல்கலை மருத்துவபீடத்தின் நூல் வெளியீடு!

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட சத்திர சிகிச்சை துறையும், பெண் நோயியல் மற்றும் மகப்பேறு துறையும் இணைந்து, கருவுறுதல் விழிப்புணர்வு தினம் மற்றும் நூல் வெளியீடு நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ். மருத்துவ பீடத்தில் கூவர் அரங்கில் நடைபெற்றது.

அதன் போது, வைத்திய நிபுணர் பா. பாலகோபி மற்றும் வைத்திய நிபுணர் சி. ரகுராமன் ஆகியோர் இணைந்து எழுதிய ‘குழந்தையின்மை விளக்கங்களும் தீர்வுகளும்’ என்ற நூல் வெளியீடும் கருவுறுதல் பற்றிய விழிப்புணர்வும் நடைபெற்றது.

இந்த நிகழ்வு மூலம் குழந்தையின்மை தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அதற்கான தீர்வுகளை தேவையுடையவர்கள் பொருத்தமான காலத்தில் பெற்றுக் கொள்ள உதவும் எனவும், கருவுறுதல் பற்றிய விழிப்புணர்வு யாழ். மருத்துவ பீடத்தால் எதிர் வரும் காலங்களில் ஆண்டுதோறும் ‘கருவுறுதல் விழிப்புணர்வு வாரமாக’ (Fertility Awareness Week )கொண்டாடப்பட்டு நாடு முழுவதும் குழந்தையின்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட யாழ். பல்கலை மறுப்பு!

சீனாவுடன் விவசாயம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

வடக்கின் வளமான நிலங்களை அபகரிக்கும் வகையில் சீனாவின் இந்தத் திட்டம் அமையலாம் எனக் கருதுவதால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதற்கு உடன்பட மறுத்துள்ளது.

இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்தமைக்காக மாணவர் சங்கம் தமது உபவேந்தருக்கு நன்றியையும் தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இந்த வருடம் 123 ஒப்பந்தங்கள்!

## கைச்சாத்திடப்பட்டுள்ளன என்கிறார் திலும் அமுனுகம

*வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இந்த வருடம் 123 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.*

*நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவற்றில், 41 புதிய ஒப்பந்தங்களும் 82 மறு முதலீட்டு ஒப்பந்தங்களும் அடங்குகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** அண்மைக்காலமாய் உங்கள் உளங்க வரும் ஒருவரைப் பற்றிச் சொல்லுங்களேன்.

**பதில்:-** ஒருவர், அல்ல இருவரைப் பற்றிச் சொல்கிறேன். முதலாமவர் இலங்கை நாடாளுமன்றத்தில் சுழல் காற்றாய் வீசி மற்றவர்களைக் கலங்கடிக்கும் சாணக்கியன். மற்றவர், தனி ஒருவராய்நின்று தமிழ்நாட்டில் அனைவரையும் அதிரச் செய்துகொண்டிருக்கும் அண்ணாமலை. இவ்விருவரும் தம் செயற்பாட்டால் என்னை வியக்க வைக்கிறார்கள்.

எங்கள் சாணக்கியனுக்கு மூன்று மொழிகளும் சரளமாய்ப் பேசவருகிறது. அவர் எந்த மொழியில் பேசினாலும், இதுதான் அவரது தாய்மொழியோ? என நினைக்க வைக்கிறார். இந்த நாட்டின் தலைமைத்துவத்திற்கு மும்மொழிப்பயிற்சியும் அவசியம் என்பதை வருங்கால இளையோருக்கு உணர்த்தி நிற்கிறார். மொழிப்பலம் மட்டுமல்லாது, முதுகெலும்புப் பலமும் அவருக்கு அதிகமாகவே இருக்கிறது. பாரதப்போரின் அபிமன்யு போல தனிஒருவராய் நின்று, சூழ நிற்கும் எதிரிகளைச் சுழற்றி அடிக்கையில், இவர் எங்கள் இனக்காரன் என்று நெஞ்சு பெருமையால் விம்முகிறது. மொழித்திறமை, வாதத்திறமை, விடயஆழம், அஞ்சா நெஞ்சு, வடிவமைப்பு என ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் அத்தனையும் அவரிடம் பொருந்திக் கிடக்கின்றன. இன்று உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ்மக்கள் அனைவரதும் ஏகோபித்த ஆதரவு பெற்ற தலைவனாய் குறுகிய காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார். கிழக்கில் உதித்த சூரியன், இந் நாட்டின் எல்லாத் தமிழர்களுக்குமாய் ஒளி வீசுகிறது. அதேநேரத்தில் பொல்லாத எதிரிகளிடம் தப்பிப் பத்திரமாய் இருக்கவேண்டுமே என்ற பயமும் உண்டாகிறது.


சாணக்கியன்


அண்ணாமலை

அடுத்தவர் தமிழ்நாட்டின் அண்ணாமலை! முன்னாள் ஐ.ஏ.எஸ்.அதிகாரி என்கின்ற அடையாளத்துடன் மட்டும் வந்தவர். இன்று மாற்றுக் கட்சித் தலைவர்களை மட்டுமல்லாது, தம் கட்சித் தலைவர்களையும் கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருக்கிறார். பாரதீய ஜனதாக் கட்சியின் பெயர் சொல்லிக் கால் வைத்தாலே, தமிழ்நாட்டு மண் அவர்களைத் தூக்கி எறியும் என்று இருந்த சூழலை முற்றாக மாற்றி, அக்கட்சி ஆட்சி அமைத்துவிடுமோ எனப் பலரையும் ஐயுற வைத்திருப்பது அவரது தனிச்சாதனை. சினிமா 'அண்ணாமலை'யை வென்றுவிடுவார் போல் தெரிகிறது. எந்தவித சினிமாக் கவர்ச்சியையும் நம்பாமல் தனித்து நின்று இவர் 'தூள்' கிளப்புவது ஓர் அதிசயம். கவர்ச்சியாலன்றி, கருத்தான பேச்சால் அனைவரையும் கவருகிறார். 'எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு, பழையபடி விவசாயம் செய்யப் போவேன்' என்ற அவரது கூற்று, பலரையும் ஈர்த்திருக்கிறது. வேண்டாமை எனும் விளிச்செல்வத்தால் நீண்ட புகழ் பெற்றிருக்கிறார். 'அண்ணா' பெயர் சொல்லி முன்பு புகழ் தேடினார்கள். இவரோ, 'வாங்ஙண்ணா, போங்ஙண்ணா' என்று பேசிப்பேசியே புகழ் தேடுகிறார். இந்திய ஊடகங்கள் தரும் காட்சியில், இவர் செல்லும் இடமெல்லாம் கூடுகிற கூட்டம், இது பா.ஜ.க. கட்சிக் கூட்டந்தானா? என ஐயுற வைக்கிறது. பிழைகண்டால் எவரையும் எதிர்க்கும் அவரது துணிவுக்கு, அச்சமின்றிச் சில ஊடகங்களின் மேல் அவர் தொடுக்கும் யுத்தம் சாட்சி சொல்கின்றது. தமிழ்நாட்டில் மூடிக்கிடந்த தாமரைமொட்டை மலரச் செய்யும் உதய சூரியனாய் உதித்திருக்கிறார். பாரதீய ஜனதாக்கட்சிக்குத் தமிழ்நாட்டில் கிடைத்திருக்கும் ஒருபெரும் சொத்து. தனி மரத்தோப்பாய் இருப்பது ஒன்றே குறை. மற்றவர்கள் எப்படியோ இவரது வேகமான வளர்ச்சியை பா.ஜ.கவே ஜீரணிக்குமா? என்பதுதான் கேள்வி.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கவனிக்க வைக்கும் இருவர் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.**

**2. கேள்வி:-** ரணில் இனப்பிரச்சினையைத் தீர்த்து விடுவார் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:-** அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்! தமிழ்த் தலைவர்கள் பேசத் தயாராவதைப் பார்த்தால் சிறிய நம்பிக்கை துளிர் விடுகிறது. ஆனால் ஊடகப் பேட்டிகளில் நம் தலைவர்கள் செய்யும் ஜனாதிபதி மீதான தேவையற்ற தூற்றுதல்களைப் பார்த்தால் அந்த நம்பிக்கைக் குருத்து, வெளிவரும் முன் கருகிவிடும்போல் தெரிகிறது.

ஒரு விடயத்தைச் சாதிக்க வேண்டுமானால், அது நடக்கும் வரையும் பொதுவெளிகளில் அதிகம் பேசுவதை நம் தலைவர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது. தமது எதிர்காலத் தேர்தல் வெற்றியை மனதில் வைத்து, தாங்கள் நம்பிக்கை இல்லாமல்தான் பேச்சுமேடைக்குப் போவதாக மக்களுக்கு இவர்கள் காட்ட முனைகிறார்கள். அது தேவையற்றது. முன்னைய அனுபவங்களை மறந்து நம்பிக்கையுடன் ஒரு காரியத்தில் இறங்குவதுதான் நல்லது. 'மயிரைக் கட்டி மலையை இழுக்கும் முயற்சிதான்'. வந்தால் மலை, போனால் மயிர். காலா காலமாக ஒருவர் இறங்கி வருகையில் மற்றவர் ஏறுவதாகவே சமாதான முயற்சிகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட தமிழர்களாகிய நாம், எதிரணியில் எவர் இறங்கிப் பேச முன் வந்தாலும் அதற்குச் சந்தர்ப்பம் அளிப்பதுதான் சரியாகும்.அரசுடன் பேசவே மாட்டோம் என்ற கொள்கை உலக அரங்கில் நம்மை தனிமைப்படுத்திவிடும்.

பெரிய கட்சிகளின் சார்பில் மக்கள் செல்வாக்குப் பெற்று ஜனாதிபதியாய் வந்த எவரும், பேரினமக்களின் ஆதரவைத் தங்கவைத்துக் கொள்ள, இனப்பிரச்சினையை நேர்மையாய்க் கையாளமாட்டார்கள் என்பது திண்ணம். ரணில், யானை மாலை போட்டு வந்த தலைவர் போல (யு.என்.பி.யானையைச் சொல்லவில்லை). தற்செயலாய் ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் என்னதான் செய்தாலும் தேர்தல் முறைப்படிஜனாதிபதியாய் வருவதற்கான சந்தர்ப்பம் இனியும் இருக்கப்போவதில்லை. எனவே அவர் இனப்பிரச்சினையில் ஒருவேளை துணிந்து முடிவெடுக்கக் கூடும். இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் உலகநாடுகளின் உதவிகளைப் பெற்று நாடு இன்றிருக்கும் பொருளாதார வீழ்ச்சி நிலையை மாற்றவும் வாய்ப்புண்டு. இந்த இரண்டு காரணங்களாலும் ரணில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் உண்டு. இது ஓர் ஊகம் மட்டுமே. நடக்கப் போவதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பெற்றோல் பிரச்சினையைத் தீர்த்தது போல இனப்பிரச்சினையையும் தீர்த்து விடுவாரோ?**

**3. கேள்வி:-** திருவள்ளுவர், பாரதி படங்களில் இருந்த திருநீற்றையும், பொட்டையும் நீக்கியதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** அது அறியாமையின் வெளிப்பாடு! இந்துசமய வெறுப்பின் காரணமாக, உயர் புலவர்களின் சமய அடையாளங்களை நீக்க முற்படுவது தவறு! அது தேவையற்றதும் கூட. அப் புலவர்கள் சமயப் பொதுமை கண்டவர்களே தவிர, சமயச் சார்பில்லாதவர்கள் அல்லர். மேற்சொன்ன இரண்டு புலவர்களும் இந்துமதத்தைச் சார்ந்து நின்றவர்கள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்க நியாயமில்லை.

உயர் கருத்துக்களைச் சொன்ன, இவர்களுக்கான சமய அடையாளங்களை நீக்கினால்தான் அவர்களின் கருத்து பன்முகப்பட்டுப் பலரிடம் சேரும் என்று சிலர் வாதிடுகின்றனர். இதே காரியத்தை வேற்றுச் சமயங்களில் இவர்களால் செய்யமுடியுமா? எல்லோருக்கும் பயன் செய்யக்கூடியவை என்பதற்காக கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்தமத அடையாளங்களை நீக்கி, பைபிளையும், குரானையும், திரிபீடகத்தையும் வெளியிட முடியுமா?

வள்ளுவர், தான் இந்துமதத்தைச் சார்ந்தவர் என்பதை, பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார். 'அழுக்காறாமை' எனும் அதிகாரத்தில் 'செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்' என்றும், 'ஆள்வினைஉடைமை' எனும் அதிகாரத்தில் 'மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான் தாளுளாள் தாமரையினாள்' என்றும், லஷ்மி, மூதேவி ஆகிய இந்துத் தெய்வங்களைத் தெளிவாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். 'நீத்தார்பெருமை' அதிகாரத்தில் 'இந்திரனேசாலும் கரி' என்று இந்துமதம் சொல்லும் தேவர்களின் தலைவன் இந்திரனைக் குறிப்பிடுகிறார். 'புணர்ச்சிமகிழ்தல்' அதிகாரத்தில் 'தாமரைக் கண்ணான் உலகு' என்று திருமாலைத் தெளிவுபடச் சுட்டுகிறார். இதைவிட அவர் பேசும் ஊழ், மறுபிறப்பு, தென்புலத்தார் போன்ற கருத்துக்களும் இந்துமதத்திற்கே உரித்தானவை என்பது வெளிப்படை. இப்படியாய் வள்ளுவர் தன் மதத்தை மிகத் தெளிவாக அடையாளம் காட்டியிருக்க, இந்துமத அடையாளங்கள் நீக்கி அவரைக் காட்டுவது எவ்விதத்திலும் நியாயமாகாது.

வள்ளுவரை விட்டுத் தள்ளுங்கள். காலத்தால் நம் அருகில் வாழ்ந்த பாரதியார் அந்தணர், இந்து மதத்தைச் சார்ந்தவர், இந்துமதக் கடவுள்களில் எல்லையற்ற பக்தி வைத்திருந்தவர் என்பதெல்லாம் 'உள்ளங்கை நெல்லிக்கனி'யான விடயங்கள். விநாயகரைப் பற்றியும், முருகனைப் பற்றியும், காளியைப் பற்றியும், சக்தியைப் பற்றியும், கண்ணனைப் பற்றியும் அவர் பாடியிருக்கும் பாடல்கள், அவரை இந்துமத ஆச்சாரியர்களில் ஒருவராகவே காட்டுகிறது. அப்படியிருக்க அவரின் 'நெற்றிப் பொட்டில் கைவைக்க' எவருக்கும் உரிமை இல்லை என்பது ஆணித்தரமான விடயம்.

அதிகாரம் கையில் இருக்கிறது என்பதற்காக வரலாற்றை மறைக்க நினைப்பது பெருந் தவறு.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இந்துமத அறிஞர்கள் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**

**4. கேள்வி:-** உங்களுக்கு 'புட்போல்' பிடிக்குமா? 'கிறிக்கட்' பிடிக்குமா? காரணம் சொல்லி விளக்குக.

(12ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

# தீவிரவாதம், பயங்கரவாதம் - இரண்டுமே இஸ்லாமின் போதனைக்கு மாறானவை!

## இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் விளக்கம்

### இந்தோனேசியாவில் இருந்து வந்த உலாமாக்களும் இந்திய உலாமாக்களும் ஒன்றிணைந்து உரையாடல்




"ஜனநாயகத்தில் வெறுப்பு பேச்சுக்கு இடமில்லை. பயங்கரவாதத்தில் தீவிரவாதம் என்பது இஸ்லாத்தின் அர்த்தத்திற்கு எதிரானது. ஏனெனில் இஸ்லாம் மதம் என்றாலே 'அமைதி' என்றே பொருள்படும்."


- இவ்வாறு இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கூறினார்.

கடந்த செவ்வாயன்று, இந்தியா மற்றும் இந்தோனேசியாவில் சர்வமத அமைதி மற்றும் சமூக நல்லிணக்க கலாச்சாரத்தை வளர்ப்பதில் உலமாக்களின் பங்கு என்ற தலைப்பில் உரையாற்றிய டோவல், ஜனநாயகத்தில் வெறுப்பு பேச்சுக்கு இடமில்லை, பயங்கரவாதத்தில் தீவிரவாதம் இஸ்லாத்துக்கு எதிரானது. ஏனென்றால் இஸ்லாம் என்பதன் அர்த்தமே அமைதி என்ற பொருள்தான்" என்றார்.

உச்சிமாநாட்டில், அகில இந்திய உலமா மற்றும் மஷெய்க் வாரியத்தின் (AIUMB) தலைவர் சையத் அஷ்ரப் கிச்சௌச்சாவி மற்றும் அஜ்மீர் தர்கா ஷெரீப்பைச் சேர்ந்த பொதுச் செயலாளர் சையத் சல்மான் சிஷ்டி ஆகியோர் டோவல் மற்றும் இந்தோனேசியாவின் அமைச்சர் முகமது மஹ்ஃபுத் ஆகியோரை புதுடில்லியில் இந்திய இஸ்லாமிய கலாச்சார மையத்தில் உள்ள சர்வமத அமைதி மற்றும் சமூக நல்லிணக்க உச்சி மாநாட்டில் சந்தித்தனர்.

முகமது மஹ்ஃபுத் கூறினார், மதம் அமைதிக்கான ஆதாரமாக இருக்க வேண்டும். முரண்பாடு, மோதல் அல்லது வன்முறைக்குக் காரணமாகவல்ல. ஏனெனில் அது ஒருங்கிணைக்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

அகில இந்திய உலமா மற்றும் மஷெய்க் வாரியத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மற்றும் உலக சூஃபி



மன்றத்தின் தலைவர் ஹஸ்ரத் சையத் முகமது அஷ்ரப் கிச்சாச்வி தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் அலுவலகத்தில் இரவு உணவுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அவரது சந்திப்பின் போது, இந்தோனேசிய அமைச்சர் முகமது மெஹ்ஃபுத் ஹஸ்ரத், 21 ஆம் நூற்றாண்டில் தஸவ்வுஃப் உலகளாவிய நெருக்கடியைத் தீர்க்க என்ற புத்தகத்தை வழங்கினார். இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் அகில இந்திய உலமா மற்றும் மஷெய்க் வாரியத்தின் தலைவர் சையத் அஷ்ரப் கிச்சௌச்சாவி மற்றும் உலக சூஃபி மன்றத்தின் தலைவரை இந்தியாவின் புகழ்பெற்ற சூஃபி மதகுருவாக அறிமுகப்படுத்தினார். அவர் இந்தியாவில் அமைதி, சூஃபி துறவிகளின் நல்லிணக்கம் என்ற செய்தியை பரப்புவதாக வலியுறுத்தினார்.

அஜ்மீர் தர்கா ஷெரீப்பைச் சேர்ந்த ஹாஜி சையத் சல் மான் சிஷ்டி, உலக சூஃபி மன்றம் மற்றும் அகில இந்திய உலமா மற்றும் மஷெய்க் வாரியத்தின் பொதுச் செயலாளர், அமைதி உச்சி மாநாட்டில் இந்திய சூஃபி முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

ஹாஜி சையத் சல்மான் சிஷ்டி பேசுகையில், இந்தியா சூஃபி துறவிகளின் தேசம். ஆன்மீக ஆசிரியர்கள் மற்றும் இந்திய முஸ்லிம்கள் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து நம்பிக்கை பயிற்சியாளர்களுடனும் அமைதியுடனும் இணக்கத்துடனும் வாழ்கின்றனர். அனைவரையும் நேசியுங்கள். யாரையும்





வெறுக்காதீர்கள். நிபந்தனையற்ற அன்புடன் அனைவருக்கும் சேவை செய்யுங்கள்" - என்று குறிப்பிட்டார் என அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகத்தில் வெறுப்பு பேச்சுக்கு இடமில்லை என இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கூறினார். இந்தோனேசியாவின் அமைச்சர் முகமது மஹ்ஃபுத் "மதம் - அமைதிக்கான ஆதாரமாக இருக்க வேண்டுமே ஒழிய, முரண்பாடு, மோதல் அல்லது வன்முறைக்கு காரணமாகவல்ல என்று கூறினார். மேலும் அது ஒருங்கிணைக்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும என்றும் அவர் வலியுறுத்தினார் என ஹாஜி சையத் சல்மான் சிஷ்டி ட்வீட் செய்துள்ளார்.

அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, உயர்மட்ட உலமா தூதுக்குழுவை இந்தியாவிற்கு அழைத்து வந்ததற்காக இந்தோனேசிய அமைச்சர் முகமது மஹ்ஃபுத் அவர்களுக்கு அஜித் டோவல் நன்றி தெரிவித்தார்.

சகிப்புத்தன்மை, நல்லிணக்கம் மற்றும் அமைதியான சகவாழ்வை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் இந்தோனேசியாவின் உலமாக்கள்மற்றும்அறிஞர்களை ஒன்றிணைப்பதே விவாதத்தின் நோக்கம் என்று அவர் கூறினார்.



தீவிரமயமாக்கல் போக்குக்கு எதிரான பொதுவான கருத்துருவாக்கத்தை மக்கள் முன்னெடுக்க வேண்டும் என்று தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் வலியுறுத்தினார்

ஜனநாயகத்தில் வெறுப்பு பேச்சு, பாரபட்ச பிரச்சாரம், அரக்கத்தனம், வன்முறை, மோதல் மற்றும் மதத்தை தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடமில்லை என்று அவர் வலியுறுத்தினார். தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் என்பது இஸ்லாத்தின் பொருளுக்கு எதிரானவை என்றும் அவர் கூறினார்.

டோவல்மேலும்கூறுகையில், ஜிஹாத்தின் மிகச் சிறந்த வடிவம் 'ஜிஹாத் அப்சல்' என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது - அதாவது ஒருவரின் உணர்வுகள் அல்லது ஈகோவிற்கே எதிரானது ஜிஹாத் - அப்பாவி பொதுமக்களுக்கு எதிரானது அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசிய அமைச்சர் முகமது மஹ்ஃபுட் எம்.டி இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் அழைப்பின் பேரில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்தோனேசியாவில் இருந்து வருகை தந்த உலமாகள் அவர்களது இந்திய சகாக்களுடன் உரையாடினர்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஊமைகளாக்கும் வல்லூறுகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 199**

எவ்வளவுதான் வீரர்களும், அவர்களது திடசங்கற்பங்களும், தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் இருந்தாலும், அவை கைகூடுதவற்கு தற்சமயத்துப் புவியியல் நிகழ்வுகளுக்கு ஏற்பதான அரசியல் நடத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

தமிழ் மக்களது மாவீரர்களை மாவீரர்களின் சமாதிகளில் கூட நிம்மதியாகத் தூங்க விடாது, அவற்றை இடித்துத் தள்ளி, அவர்களை நினைக்கக் கூட விடாது, அட்டகாசங்கள் செய்தது கோட்டாபயவின் அரசு. இதனால் மாவீரர்கள் மக்களின் மனங்களில் உறங்கினார்கள்.

இந்த வருடத்தில் ஜனாதிபதி ரணிலின் அரசில் அதனை 'அரசியல் கனவுகளின் நினைவாக' அல்லாமல் 'உறவுகளின் நினைவு கூரலாக' நடத்த மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.



அப்படியும் தான்தோன்றித்தனமாக இராணுவம், அதிகாரங்களின் முட்டுக்கட்டைகள் இருந்தன.

எனினும் –

'மாவீரர்களை நினைவேந்த கடலெனத் திரண்ட மக்கள்; கொழுந்து விட்டு எரிந்தன ஈகைச்சுடர்கள்; கண்ணீரால் நனைந்தது தமிழர் தாயகம்' எனக் 'காலைக்கதிர்' முகப்பு செய்தியிட்டது.

மற்ற ஊடகங்களும் இணைந்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மக்களின் உள்ள கிடக்கைகளை வெளிப்படுத்தின.

'காலைக்கதிர்' ஆசிரியரின் 'இனி இது இரகசியம் அல்ல' என்ற 'மின்னல்' பதிவில் சில யதார்த்தங்களும் சுட்டிக்காட்டப்பட்டன.


பக்கங்கள்: 15

காலைக்கதிர் Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 12 திங்கட்கிழமை 28.11.2022 கதிர் 23

இனி இது ரகசியம் அல்ல!

மாவீரர் தினம் இம்முறை பெரிய விக்கினம் ஏதுமின்றி, அங்கிங்கு ஒரு சில சம்பவங்களோடு, முழு அளவில் உணர்வுபூர்வமாக நடந்தேறி முடிந்து விட்டது.

தென்னிலங்கை ஆட்சிப்பீடம் இந்த முறை மாவீரர் தினத்தை ஒரு நடுநிலைக் 2

மாவீரர்களை நினைவேந்த கடலெனத் திரண்ட மக்கள்

கொழுந்துவிட்டெரிந்தன ஈகைச்சுடர்கள் கண்ணீரால் நனைந்தது தமிழர் தாயகம்

மரணத்தின் நினைவேந்தலை அரசியலாக்கி, அதிகாரத்தில் இருந்தவர்களுக்கு எதிராகத் தட்டித் தூண்டி எழுப்பியவன் மார்க் அண்டனி. சீசரின் தளபதி. அவரது நண்பர். 'ஜூலியசீசர்' என்ற ஷேக்ஸ்பியரின் நூலில் அமையும் நினைவு கூரல் பேச்சு பொதுவாக மதிக்கப்படுவது. அதேபோல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின பேச்சுகளும் அமைவது வழமை.

இனி அவை தொடர்பில் மின்னலினால் பதியப்பட்டவற்றைப் பார்ப்போம்.

"ஆனால், அவற்றுக்கு அப்பால் நினைவேந்தலுக்கு அரசு தந்த தாராள அனுமதியை, தெற்குடன் சீண்டலுக்கான முயற்சியாக சில இடங்களில் காய்கள் நகர்த்தப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

"நாங்கள் தமிழர்கள், நமக்காகத் தங்களையே தற்கொடையாக ஈகம் செய்த நம் தியாகிகளின் நினைவேந்தலில் காட்டும் ஒழுங்கு, நெறிமுறை, நியாயம் போன்ற விழுமியங்கள், அதைப் பார்க்கின்ற படையினருக்கும் நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்க வேண்டும். அந்த நினைவேந்தலின் நியாயப்பாடு அந்தப் படைச் சிப்பாயின் மனதை நெருடுவதாக இருக்க வேண்டும்.

அதை விடுத்து, இந்த நினைவேந்தல் அனுமதியை தென்னிலங்கையையும் படைத்தரப்பையும் சீண்டிக் கொழுவலுக்கு இழுக்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முயலக் கூடாது.

நினைவேந்தலுக்கான இடத்தெரிவு, தயாரிப்பு, சோடணை, ஒழுங்குமுறை போன்றவற்றில் அந்த நினைவேந்தல் இழப்பின் உரித்து தெரிய வேண்டுமே தவிர, பதில் சண்டித்தனம் அல்ல. இம்முறை நினைவேந்தல் நிகழ்வு நடத்திய ஒவ்வொருவரும் தத்தமது நிகழ்வு குறித்து இந்த நிலைப்பாட்டை சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது."

– என்று அது அமைந்தது.

அவ்வளவு எழுதப்பட்டும் மாவீரர் தின நிகழ்வுகளை அரசியலாக்கி, மன்னாரிலும் அடுத்த ஊர்களிலும் அதிலிருந்த அரசியல் பற்றி சுவரொட்டிகள் எழுந்தன எனச் செய்திகள் வெளியாகின.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் இப்படி நரகத்திலேயே தவிக்கிறார்கள் என்பதற்கு சுவாமி இராமகிருஷ்ணர் சொர்க்கத்திற்கு விலாசம் கேட்டவனுக்குச் சொன்ன ஒரு சிறிய கதையைப் பார்க்கலாம்.

ஒருவன் தான் சந்தித்த சுவாமிகள், தவசிகள் இடமெல்லாம் "சுவாமி சொர்க்கம், சொர்க்கம் என்கிறார்களே... அதற்கு விலாசம் தர முடியுமா?" – என்று கேட்ட கேள்விக்கு அவர்கள் தங்களுக்குத் தெரிந்தால் நாங்கள் போக மாட்டோமா, எமது குருநாதரும் சொர்க்கம் உண்டு என்று சொன்னார், அவர் சொல்லும்போது கூறுகிறேன் என்ற சாரப்படதான் பதில்கள் வந்தன. இந்தப் பதில்களால் சலித்து போனவன், ஒருநாள் சுவாமி இராமகிருஷ்ணனிடம் கேட்ட பொழுது அவர் சொர்க்கம் பற்றிய ஒரு கதையைச் சொன்னார்.

பரமசிவன் ஒரு நாள் நரகத்துக்கு பல அண்டாக்களில் கமகமவென மணம் வீசிய நெய்ச் சோறு கொண்டு போய் வைத்து, நரகவாசிகளிடம் "இவையெல்லாம் உங்களுக்குத்தான். நீங்கள் சாப்பிடலாம். ஆனால் ஒரு நிபந்தனை. இதனைக் கைகளினால் எடுத்து உண்ணும் போது, நீங்கள் உங்களது கைகளில் இருப்பதை உங்கள் மூக்கினால் முகரக்கூடாது." என்றார்.

அதேபோல் பரமசிவன் சொர்க்கத்துக்கும் சென்று அண்டாக்களில் நெய்ச் சோறு வைத்து உண்ணுவதற்கான நிபந்தனையும் கூறினார்.

பின்னர் நரகத்துக்கு வந்தபோது அண்டாக்கள் எதுவுமே காலியாகாமல் அப்படியே இருந்தன. பரமசிவன் ஏன் என்று கேட்டதற்கு, எப்படி முடியும்? நீங்கள்தான் கையை முகரக் கூடாது எனச் சொல்லிவிட்டீர்களே என அவர்கள் குறைப்பட்டு கொண்டார்கள்.

பரமசிவன் சொர்க்கத்துக்கு திரும்பிய போது அண்டாக்கள் யாவும் அங்கு காலியாக இருந்தன. எப்படிச்சாப்பிட்டீர்கள் என கேட்டதற்கு, ஒருவர் தன் கையால் எடுத்து மற்றவருக்கு ஊட்டி விட, அடுத்தவர் மற்றவருக்கு ஊட்டி விட, யாவரும் தங்கள் கை கைகளை உண்ணும் போதும் முகராமல் எல்லாவற்றையும் முடித்து விட்டார்கள் எனச் சொன்னார்கள்.

சுவாமி ராமகிருஷ்ணர் கேள்வி கேட்டவனுக்கு சொன்னார்.

"இதோ பார்! நரகமும் சொர்க்கமும் உன்னிலேதான் உள்ளன. நீ எப்படி வாழ்கிறாய் என்பதைப் பொறுத்தது அது. சுயநலமாக, ஒருவருடன் சேர்ந்து உதவியாக வாழ விட்டால், அது நரகம். அதை விடுத்து உதவி செய்பவனாக, பரோபகாரியாக, சேர்ந்து வாழ்பவனாக, இருந்தால் அது சொர்க்கம் என்றார்.

தமிழ் மக்கள் தொடர்ந்து அதே நிலைகளில் இருப்பதற்கும் இந்த குணாதிசயங்களே காரணமோ? இவை எப்போது மாறும்? அல்லது மாறுமா?

(வளரும்...)



## எமது மக்களின் காணிகளைக் காடுகளாக மாற்றி ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ஆகியன உள்ளன

இப்படியிருக்க, விடுவிக்கப்படாமல் உள்ள 3ஆயிரத்து 27 ஏக்கர் காணியில் , ஆயிரத்து 617 ஏக்கர் காணியினை இராணுவத்தினருக்கு சுவீகரிப்பதற்கு காணி அமைச்சின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தை விரிவுப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 28 ஆம் திகதி அரசாங்கம், பிரதேச மக்களின் காணிகளை சுவீகரித்தது. அதியுயர் பாதுகாப்பு வலயமாக இந்த காணிகளை அரசாங்கம் தன்வசம் வைத்துள்ளது.

794 பொதுமக்களுக்கு சொந்தமான 262 ஹெக்டயர் காணிகள் (397 காணித்துண்டுகள்) இவ்வாறு சுவீகரிக்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர்களின் விவரங்கள், அக்காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் என்பன மாவட்ட செயலகத்தால் பெறப்பட்டு, அவை இணையத்தில் உள்ளன.

அந்த மக்களுக்கான நஷ்டஈடுகள் / பதில் காணிகளை வழங்கல் துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் அதிக பயணிகளை கொண்ட விமானங்களை தரையிறக்க தேவையான ஓடுபாதை விஸ்தரிக்க மேலும் காணிகள் தேவைப்படுகிறது. ஆனால் கடந்தகால நஷ்டஈடுகள் இன்னமும் கொடுக்கப்படாமையால் மக்கள் மத்தியில் அதற்குரிய வரவேற்பு இல்லை என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

இவைதவிர, வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் யாழ்ப்பாணத்தில், மருதங்கேணி, நாகர்கோவில், பருத்தித்தீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் விடுவிக்க வேண்டியுள்ளது.

மருதங்கேணி - சுண்டிக்குளம் தேசிய பூங்காவுக்கென முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் பகுதிகளில் 325காணித்துண்டுகள்கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குள் 273 குடும்பங்களின் வீடுகளும் 345 குடும்பங்களின் விவசாய நிலங்கள் உள்ளன. மேலும் 50க்கும் மேற்பட்ட தனியார், பொது அமைப்புகள், அரச அமைப்புகளின் கட்டடங்கள், குளங்கள், பொதுக்கிணறுகள், மயானங்கள், கோவில்கள் போன்றவையும் உள்ளன

2016இல் நாகர்கோவில் இயற்கை ஒதுக்கம் வர்த்தமானி அறிவிப்பால் பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குள் அக்கிராமத்திலுள்ள 273 வீடுகள், 08 குளங்கள், 200 ஏக்கர் பயிர்நிலங்கள், 11 ஆலயங்கள், 47 பொது நிறுவனங்கள், 6 மயானங்கள், 1 விளையாட்டு மைதானம் என்பன இதனால் பாதிப்படைந்துள்ளன. அதேபோன்று பாரம்பரிய மீன்பிடியும் பாதிப்படைந்துள்ளது.

கடந்த 2015இல் நெடுந்தீவு தேசிய பூங்கா பிரகடனம் செய்யப்பட்டது. இதனால் தற்போது தீவின் மூன்றில் ஒரு பகுதி அந்த வலயத்துக்குள் அகப்பட்டுள்ளது. பல குடும்பங்களின் விவசாய மற்றும் தனியார் நிலங்கள் இதற்குள் அடங்கியுள்ளன. இவை அனைத்துக்கும் தீர்வு கிடைக்க வேண்டும்.

இவற்றோடு வனப்பாதுகாப்பு திணைக்களத்தினால் கையப்படுத்தப்பட்டுள்ள நிலங்களும் எங்கள் மக்களை விசனமடைய வைத்துள்ளது.

மணற்காடு சவுக்கம் தோப்பில் 702 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இதற்குள் 8 தனியார் காணி, 10 பொது நிறுவனங்கள், 2 மீன்பிடி பகுதிகள் போன்றன அகப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக முன்னாள் காணி அமைச்சர் நேரில் வந்து மக்களை சந்தித்து தீர்வு காண்பதாக தெரிவித்திருந்தார். ஆனால் இன்னும் தீர்வுகள் இல்லை.

அதேபோன்று 2019இல் சாவகச்சேரி சந்திரபுரத்திலும், சரசாலையிலும் கையப்படுத்தப்பட்ட காணிகளில் சந்திரபுரத்தில் 101.8 ஏக்கர் காணியும், சரசாலையில் 86 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட வேண்டும்.

இவற்றுள் வீடுகள், ஆலயங்கள், மயானம், மேய்ச்சல் நிலம், விவசாய நிலம் போன்றன உள்ளடங்கியுள்ளன.

இப்படியாக தீர்க்கப்பட வேண்டிய காணி சார்ந்த பிரச்சினைகள் விரைவாக தீர்வு காணப்பட வேண்டும். பல அமைச்சர்கள், ஆளுநர்கள், அதிகாரிகள் மாறி மாறி வந்தும் தீராத பிரச்சினைகளாக இவை உள்ளன. ஜனாதிபதி அவர்கள் அண்மையில் வவுனியாவுக்கு வந்திருந்தபோது தெரிவித்த கருத்துகள் நம்பிக்கை தருகின்றன. அவை அதிகாரிகள் மட்டத்திலும் விரைவுபடுத்தப்பட வேண்டும். எங்கள் மக்களின் காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வு உடனடியாக எட்டப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து சுற்றுலாத்துறை தொடர்பாக உரையாற்றும்போது -

இலங்கையில் கொவிட் நிலைமை காரணமாக சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வீழ்ச்சியால் சுற்றுலாத்துறையில் முதலீடு செய்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் தற்போது சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

வட மாகாணத்தை சுற்றுலாத் தலமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் பல உள்ளன. கடற்கரைகள், தொல்பொருள் இடங்கள், அரியவகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் என்பவற்றோடு பல சுற்றுலா இடங்களும் உள்ளன. வட மாகாணத்திற்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும் அனுபவம் ஏனைய மாகாணங்களை விட வித்தியாசமானது.

எனவே எமது பிரதேச சுற்றுலாத் துறையை மேம்படுத்த நான் சில கோரிக்கைகளை இச்சபையில் முன்வைக்கிறேன்.

1. சுற்றுலாத்துறையை மேம்படுத்த, பயிற்சி பெற்றவர்கள் இருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஒரு ஹோட்டல் பாடசாலை உள்ளது, ஆனால் அது ஒரு நோக்கத்திற்காக கட்டப்பட்டதாக இல்லை. அது ஒரு வாடகை கட்டிடத்தில் உள்ளதோடு சில பாடப்பிரிவுகளை மட்டுமே கொண்டுள்ளது. வடமாகாண மக்களும் ஹோட்டல் துறையில் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பைப் பெற விரும்புகிறார்கள். கொழும்பில் அல்லது கண்டியில் உள்ள பாடசாலைகளைப் போன்று வடமாகாணத்திலும் ஒரு நோக்கத்துடன் கூடிய ஹோட்டல் பாடசாலையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதே எமது அன்பான வேண்டுகோள்.

2. பலாலியில் உள்ள யாழ் சர்வதேச விமான நிலையம் தொடர்பில் பல பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும், செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தியா எங்களின் முதன்மையான சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் நாடு. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஆரம்பம் இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும். இது முழு நாட்டிற்கும் சுற்றுலாசார் பயனை வழங்கும்.

3. கடந்த காலங்களில் ராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையே படகு சேவை இடம்பெற்றது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கிடைக்கம் சுற்றுலா வருமானத்தை மேம்படுத்த, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி, குறித்த படகு சேவையை மீண்டும் தொடங்க வேண்டும்.

4. வனவிலங்குசார் சுற்றுலாவை மேம்படுத்த இலங்கை தற்போது ஆர்வமாக உள்ளது. காட்டு யானை மற்றும் சிறுத்தைகளை காணக்கூடிய பல இடங்கள் இலங்கையில் உள்ளன. அதேநேரம் இலங்கையில் காட்டு குதிரைகள் இருக்கும் ஒரே இடம் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவாகும். ஆகவே அதற்குரிய திட்டமொன்றை வகுத்து, காட்டு குதிரைகளை தரிசிப்பதற்கான இடமாக நெடுந்தீவை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. இலங்கையில் பல பகுதிகளில் சுற்றுலா விடுதிகள் உள்ளன. உதாரணமாக, பெந்தோட்ட, பாசிகுடா மற்றும் யால பகுதிகளை குறிப்பிடலாம். கற்பிட்டியில் இத்தகைய விடுதியொன்று அமைக்கப்பட உள்ளது. ஆகவே வடமாகாண சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள உல்லாச விடுதிகளைப் போன்று சுற்றுலா விடுதிகளை அமைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

6. ராமர் சேது பாலத்தை பார்வையிடுவதற்காக இந்திய அரசு ராமேஸ்வரத்தில் ஒரு கோபுரத்தை கட்டியுள்ளது. அது ஏராளமான சுற்றுலா பயணிகளை கவர்ந்துவரும் ஒரு சுற்றுலாத்தலமாக மாறுகிறது. இந்த ராமர் சேது பாலத்தின் மறுமுனை தலைமன்னாரில் உள்ளது. ராமர் - சேது பாலத்தை மட்டுமின்றி தென்னிந்தியாவின்தென்முனையையும் பார்வையிடுவதற்கு தலைமன்னாரில் ஒரு கோபுரம் தேவையாகும். இது இலங்கையின் உள்நாட்டு சுற்றுலாவை பெரிதளவில் மேம்படுத்தும்.

7. இலங்கையைச் சுற்றியுள்ள தீவுகளைஅபிவிருத்திசெய்யஅரசாங்கத்திடம் திட்டங்கள் உள்ளன.

வடமாகாணத்தை பொறுத்தவரையில் குறிகட்டுவான் படகு துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். இதனை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தினால், அருகிலுள்ள தீவுகளுக்கு படகு சேவைகளை இயக்க தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் ஆர்வத்துடன் முன்வருவார்கள். ஆஸ்திரேலியாவில் உள்ள படகுத் துறைமுகங்களைப் போல குறிகட்டுவான் படகுத்துறைமுகமும் சுற்றுலாபயணிகளின் வரவேற்பை பெறும்.

ஆகவே எங்கள் பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்துறை வளங்களை சரியாக பயன்படுத்தினால் நாட்டுக்கும் வடமாகாணத்துக்கும் சிறந்த வருமானத்தை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

அவரது உரையைத் தொடர்ந்து உரையாற்றிய சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் கௌரவ ஹரின் பெர்னான்டோ -

வடக்கின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும் என்ற உங்கள் கோரிக்கை சரியானது. இதற்கான குழுவொன்றை நாம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் ஆரம்பிக்கவுள்ளோம். அதில் பங்கெடுக்குமாறு உங்களை அழைக்கிறேன் - என்றார்.

மேலும், பலாலி சர்வதேச விமான நிலையத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் விமான சேவைகள் ஆரம்பமாகும் என்ற செய்தியையும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

அமைச்சரை தொடர்ந்து கருத்துரைத்த அங்கஜன் இராமநாதன், எமது பிரதேசத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி பணிகளில் அமைச்சர் காட்டிவரும் முற்போக்கான செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, வடக்கின் சுற்றுலா அபிவிருத்தியில் தனது பங்களிப்பு நிச்சயமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.





காலைக்கதிர் Kalaikkathir

## கானல்நீர்க் கனவாகிறது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு,கிழக்கில் தற்போது காணப்படும் நிலை தொடர்ந்தால் தமிழ் மக்கள் தங்கள் அடையாளம், சுயமரியாதை, ஏன் கௌரவத்தைக் கூடப் பேண முடியாத நிலையேற்படும் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெளியான அந்தப் பேட்டியை ஆர்.கே.இராதாகிருஷ்ணன் செய்தியாக்கியுள்ளார்.

அந்தப் பேட்டியின் முழு விவரம் வருமாறு:-

கேள்வி:அரகலயா (சிங்களவர்களின் போராட்டம்) பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன? ஆட்சியில் இருந்தவர்கள் அனைவரும் மீண்டும் இலங்கைக்கு வந்து செழித்து வருவதை நான் காண்கிறேன்.

பதில்:- பிரதான தவறு செய்தவரை அவர் பதவியில் தொடர முடியாது என்பதை அவர்ககளால் உணர்த்த முடிந்தது (ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ) என்ற அர்த்தத்தில் அரகலய வெற்றி பெற்றது. துரதிஷ்டவசமாக, ரணில் (விக்கிரமசிங்க)தனதுசொந்தக்காரணங்களுக்காக அரசாங்கத்தை ஆதரித்தார். இந்த ஆதரவின் மூலம் அவர் பிரதமராக முடிந்தது. இப்போது, அவர் ஜனாதிபதி. அவர் முன்பு அவரை எதிர்த்தவர்களின் ஆதரவுடன் இப்போது ஜனாதிபதியானார்.

அரகலயா ஓரளவு வெற்றியடைந்ததுடன், முக்கிய குற்றவாளியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்போது கேள்வி என்னவென்றால் நம்மிடம் அரசாங்கம் இருக்கிறதா? எது அரசாங்கம்? யார்யாருக்கு ஆதரவு? பொருளாதாரத்தில் அவர்களின் நிலைப்பாடு என்ன? எவருமறியார். இது எல்லாம் மிகவும் குழப்பமாக உள்ளது. என்ன கொள்கைகளை பின்பற்றுகிறார்கள் என்றும் தெரியவில்லை. விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு உறுப்பினர்தான். அவர் ராஜபக்ஷேவின் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனாவின் எம்.பி.க்களின் ஆதரவுடன் வாழ்கிறார்.

தற்போதைய நிலையில், தவிர்க்க முடியாதது மற்றும் நடக்க வேண்டியது பொதுத் தேர்தல்கள்தான். யார் ஆட்சியமைக்க வேண்டும்என்பதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளையே பின்பற்றுகின்றார் என நான் நினைக்கிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ (முன்னாள் பிரதமர்), கோட்டாபய ராஜபக்ஷ (முன்னாள் ஜனாதிபதி) மற்றும் பஸில் ராஜபக்ஷ (முன்னாள் நிதி அமைச்சர்) ஆகியோரின் நம்பகத்தன்மை கடுமையாக கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அவர்கள்தான் நாட்டை ஆண்டார்கள். அரகலயாவின் உச்சத்தில் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் (கடற்படை தளத்தில்) தலைமறைவாக இருக்க வேண்டியிருந்தது.

இந்த நாட்டை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிக்கும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது, ஏனெனில் இது (சிறிலங்கா பொதுஜன பெரமுனவை ஆட்சியில் இருந்து அகற்ற மக்கள் விரும்பினாலும் அந்தக் கட்சியே கட்டுப்படுத்தும் தற்போதைய நிலை தொடரக்கூடாது. அது இன்னும் நிலைமையை மோசமாகும்.

பொருளாதாரச் சரிவு எந்த விதத்திலும் விவேகமான முறையில் கையாளப்படுவதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் (அரசு) பிணை எடுப்புக்காக சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றிருந்தனர். இதுவரை, சர்வதேச நாணய நிதியம் எதுவும் கூறவில்லை. இது மிகுந்த கவலை அளிக்கிறது.

கேள்வி:-அப்படியானால், மக்களிடம் திரும்பிச் செல்வதுதான் ஒரே தீர்வு என்று நினைக்கிறீர்களா?

பதில்:- முழு நாடும் அவர்களுக்கு எதிராக இருந்ததால் அவர்கள் எப்படி தொடர்ந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எந்த அரசாங்கத்துக்கும் எதிர்ப்பின் உச்சம் அது. (விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு) ஏன் (அறகலய) தொடரவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. இந்த அரசு செல்ல வேண்டும் என்றே மக்கள் விரும்பினர். எனவே, அவர்கள் ஒரு ஆணைக்காக மீண்டும் மக்களிடம் செல்ல வேண்டும்.

தமிழரின்அரசியல்அபிலாஷைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது என்பது கானல் நீராக மாறிக்கொண்டிருக்கும் கனவு. தமிழர்களுக்கு எந்த லாபமும் கிடைக்கவில்லை. உண்மையில், வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் தொகை மற்றும் கலாச்சார மாற்றங்கள் காரணமாக அவர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகளால் பெரிய அளவில் முன்னேற முடியவில்லை.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு (இலங்கை) சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. தமிழ் மக்கள் சுதந்திரத்தை ஆதரித்தனர். குடியுரிமைச் சட்டம் மற்றும் கிழக்கிலும் வடக்கிலும் பெருமளவிலான சிங்களக் குடியேற்றங்களுக்குப் பிறகு அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது அந்த பகுதிகளில் மக்கள்தொகை அமைப்பை மாற்றியது.

தமிழ்மக்கள்அந்தப்பகுதிகளில்சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வைக் கோரினர். இதுவே (1957) பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் மற்றும் (1987) இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையாகும். இரண்டுமே தமிழ் மக்களின் அடையாளம், பிரதேசம் மற்றும் சுயநிர்ணய உரிமை அல்லது அவர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமை தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தன. துரதிஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் ஒப்பந்தங்களை மீறியுள்ளது.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், தமிழர் விரோத நிலைப்பாட்டின் அடிப்படையில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதிலேயே முதன்மையாக அக்கறை கொண்டுள்ளனர். இந்நிலைமை தொடரும்வரை ஒன்றும் செய்ய முடியாது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையிலும் இலங்கை ஒரு தரப்பாக உள்ளது. இரண்டு உடன்படிக்கைகளும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குகின்றன.

நாடு எந்த வகையிலும் துண்டாடப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் பிரிக்கப்படாத இலங்கைக்காக நிற்கிறோம். அதே சமயம் இப்படியே போக முடியாது. இவ்விடயத்தை நன்கு அறிந்த சர்வதேச சமூகத்தை அணுகுவதைத் தவிர எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. வடக்கு, கிழக்கு தொடர்பாக சில ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட அனைத்துலக சமூகம் தலைமை தாங்கி வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு ஏற்பாட்டிற்கு அழுத்தம் கொடுப்பது கடமையாகும்

இலங்கை அரசாங்கம் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கவில்லை. ஒரு பக்கம் வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றத்தின் மூலம் சிங்கள சனத்தொகை அதிகரித்து வருகின்றது, மறுபுறம் வன்முறைகள் மற்றும் ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகள் காரணமாக தமிழர்கள் வெளியேறி வருகின்றனர். இப்படியே போனால், மக்கள் தங்கள் அடையாளத்தையும், சுயமரியாதையையும், கண்ணியத்தையும் கூட காப்பாற்ற முடியாமல் போய்விடும். சர்வதேச சமூகம் அதற்கு இடமளிக்கக் கூடாது. இது உலகிற்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக அமையும். இந்தப் பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் இந்த நாட்டில் அமைதியை அவர்கள் விரும்பினால், இந்த பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## Provision of a Private Security Service for the University of Jaffna -2023/2024

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.

2. Period of contract shall be a calendar year days subject to a performance evaluation period of 90 days from the start date.

3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have its registered office or sub office in Northern Province (closer to main premises) and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.

3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**

3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**

4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **175 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.

5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.

6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **22nd December 2022** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of **Rs. 5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 970000060000276** at any Branch of People's Bank.

7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before **2.00 p.m. on 27th December 2022.** Late Bids or incomplete Bids will be rejected.

8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.

9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Four hundred thousand only **(Rs. 400,000.00).**

10. Pre-bid meeting will be held at **10.00 am on 16th December 2022** in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairman/ Department Procurement Committee**
**University of Jaffna, Thirunelvely,**
**Jaffna.**
**03.12.2022**

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களுக்காக எந்த மட்டத்துக்கும் இறங்கி தொழிற்சங்க தாக்குதலை தொடுக்க தயார்!

## பாரத் அருள்சாமி சூளுரைப்பு



“இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அச்சுறுத்தல்கள் மூலம் அடிபணிய வைக்க முடியாது. அது வெறும் பகல் கனவு மாத்திரமே, மக்களுக்காக எந்த மட்டத்தில் இறங்கியும்” அதாவது 8 அடி அல்ல 64 அடி பாய்ந்தேனும் ‘அரசியல்’, ‘தொழிற்சங்க’ தாக்குதலை தொடுப்பதற்கு காங்கிரஸ் தயார்.’ என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரான பாரத் அருள்சாமி சூளுரைத்துள்ளார்.

அத்துடன், இ.தொ.காவின் உயர்மட்ட குழுவினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் சந்திக்கவுள்ளனர் எனவும், இதன்போது மலையக மக்கள் தொடர்பில் முக்கியமான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார். ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, சமகால அரசியல் மற்றும் தொழிற்சங்க விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பாரத் அருள்சாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டில் உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளது. உலகில் உணவுக்கான பணவீக்கப் பட்டியலில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளது. அதேபோல மருந்து தட்டுப்பாடும் நிலவுகின்றது. இவ்விரு பிரச்சினைகளும் மலையகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

எனவே, இந்த விவகாரங்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவினர், ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். இதன்போது எமது மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடப்படும். அதேபோல எமது மக்களுக்கான தற்காப்பு பொருளாதாரத் திட்டங்கள் சம்பந்தமாகவும் யோசனைகள் முன்வைக்கப்படும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி, ஒரு சிலர் சுற்றுலா விசாவில் புலம்பெயர் தொழிலாளர்களாகச் செல்கின்றனர். ஆட்கடத்தலில் ஈடுபடும் ஒரு சில விசமிகள் எமது சமூகத்திலும் உள்ளன. எனவே, வெளிநாடு செல்ல இருப்போர் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களையே நாட வேண்டும். இது சம்பந்தமாக தோட்ட வாரியாக எமது இளைஞர், மகளிர் அமைப்புகள் ஊடாக விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

எங்களின் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலும் சரி, தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் சரி, தற்போதைய தலைமைத்துவத்தின் கீழும் சரி, மக்களுக்கான அரசியல், தொழிற்சங்க பயணத்தையே காங்கிரஸ் முன்னெடுக்கின்றது.

மக்கள் நலனே எமக்கு முக்கியம். மக்களுக்கு எதிரான சக்திகளுக்கு தக்க பாடங்களைப் புகட்டியுள்ளோம். அச்சுறுத்தல்கள் மூலம் காங்கிரஸை அடிபணிய வைக்க முடியாது. மக்களுக்காக எட்டு அடி அல்ல 64 அடிகூட பாய்ந்து, அரசியல், தொழிற்சங்க தாக்குதலை நடத்த காங்கிரஸ் தயார் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். என்றார்.

# இலங்கையின் சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம் கற்பதில் தவறேதும் உள்ளதா?

## ஜனாதிபதி ரணில் கேள்வி



சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என சட்ட ஆய்வு கவுன்ஸில் எடுத்துள்ள தீர்மானத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டுமாயின் அவர்களுக்கு பகுதியளவு நிதியுதவி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். ஆங்கிலம் கற்பதில் தவறேதும் உள்ளதா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் முன் வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் குறிப்பிட்டவை வருமாறு

சட்டக்கல்லூரி மாணவர்கள் இனி ஆங்கில மொழியில் மாத்திரம் தான் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்ற தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளார் கள். இந்த விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்ன?

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்ட ஆய்வு கவுன்ஸில் தான் அந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. இது அரசாங்கத்தின் நிறுவனமல்ல, சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் மற்றும் இலங்கை சட்டத்தரணி கள் சங்கத்தின் உறுப்பினர்கள் கவுன்ஸிலின் உறுப்பினர்களாக உள்ளார்கள். ஆகவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை.

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டுமாயின் அதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஆங்கில பாடநெறிக்கான கட்டணத்தை பகுதியளவில் செலுத்துவது தொடர்பாகவும் அவதானம் செலுத்தலாம், ஆங்கில மொழி கற்பதில் ஏதேனும் தவறு உள்ளதா என கேள்வி எழுப்பினார்.

# மனித உரிமை ஆர்வலர்களை தண்டிப்பதும் அவர்களுக்கு தீங்கிழைப்பதும் பிரச்சினைக்குத் தீர்வை கொண்டுவராது!

## புரொன்ட்லைன் டிபென்டர்ஸ் அமைப்பு தெரிவிப்பு

மனித உரிமை ஆர்வலர்களைத் தண்டிப்பதும் அவர்களுக்குத் தீங்கிழைப்பதும் அவர்களை தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பதற்காக பல வழக்குகளைத் தாக்கல் செய்வதும் நெருக்கடிக்கான தீர்வல்ல என தெரிவித்துள்ள டப்ளினை தளமாக புரொன்ட்லைன் டிபென்டர்ஸ் அமைப்பு, அனைத்து பல்கலைக்கழக பிக்குமார் ஒன்றிய ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்ம தேரர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில்வைக்கப்பட்டுள்ளதையும் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டுள்ளதையும் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது. தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகளின் அடிப்படையில் ஆர்ப்பாட்டங்களிற் கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சர்வதேச அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாணவத் தலைவர்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிராக சட்டரீதியான தடைகளையும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும் பயன்படுத்துவது மனித உரிமைகள் மற்றும் அமைதியாக அதிருப்தியை வெளியிடுவதற்கான உரிமை தொடர்பான இலங்கையின் வாக்குறுதிகளுக்கு முரணான விடயம் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவது தொடர்பாக இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு ஓகஸ்ட் 22 ஆம் திகதி பகிரங்க அறிக்கையொன்றில் கரிசனை வெளியிட்டிருந்தது. இலங்கையின் அரசியல் பொருளாதார அமைதியின்மைக்கு ஆக்கபூர்வமான தீர்வைக் காண்பதற்கு மனித உரிமை ஆர்வலர்கள் முக்கியமானவர்கள் என மனித உரிமை ஆர்வலர்கள் பாதுகாப்பு தொடர்பான அமைப்பு தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆர்வலர்களைத் தண்டிப்பதும் அவர்களுக்கு தீங்கிழைப்பதும் அவர்களைத் தொடர்ந்தும் தடுத்துவைத்திருப்பதற்காக பல வழக்குகளை தாக்கல் செய்வதும் நெருக்கடிக்கான தீர்வில்லை எனவும் புரொன்ட்லைன் டிபென்டர்ஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

# பாட்டும் நானே?....

(08ஆம் பக்கம் பார்க்க)

**பதில்:-** சந்தேகத்திற்கு இடமில்லாமல் எனக்குப் ‘புட் போல்’தான் பிடிக்கும். அதைப் பிடிக்கச் செய்தவர் காலைக்கதிர் ஆசிரியர் வித்தியாதரன் அவர்கள்தான். 70 களில் என்று நினைக்கிறேன். யாழ் முற்றவெளியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான ஒரு ‘புட்போல் மச்சை’ வித்தியாதரனுக்காகப் பார்க்கச் சென்றிருந்தேன். ‘மச்’ தொடங்குகிற பொழுது அக்கறை இல்லாமல் இருந்த நான் அது முடியப் போகும் நிலையில் ‘ரென்ஷனின்’ உச்சத்தைத் தொட்டேன். அந்த ’மச்சில்’ கடைசி நிமிடத்தில் கோல்காப்பு வீரன் வித்தியாதரன் நுட்பமாய் ஒரு பந்தைத் தடுத்து இந்துக் கல்லூரிக்கு வெற்றி தேடித் தந்த காட்சி இன்றைக்கும் நினைவில் இருக்கிறது.



யாழ் இந்துவுக்கு 1975 இல் வெற்றிக்கிண்ணம் ஈட்டித் தந்த (கப்டன் - உதவிக் கப்டன்) தயாளன் - வித்தியாதரன் இணை.

‘கிரிக்கட்டில்’ இரண்டு பேர் விளையாட 11 பேர் சூழ நின்று அவர்களை ‘அவுட்டாக்க’ முனைவது எனக்கு தர்மப் பிழையாய்ப் படும். ‘புட்போலில்’ அப்படியில்லை. இரண்டு அணியிலும் முழுப்பேரும் ஒருமித்து ஒரே நேரத்தில் விளையாடுவார்கள். அது தவிரவும் குறித்த ஒன்றரை மணி நேரத்தில் சுறு சுறுப்பாக ‘புட்போல்மச்’ முடிந்துவிடும். ‘கிறிக்கட்மச்சோ’ சப்பிய ‘சுவிங்கம்’ போல் சிலவேளை இழுபடும். நின்று பந்தை அடிக்கும் ‘கிரிக்கட்டை’ விட, சென்று பந்தை அடிக்கும் ‘புட்போல்’ நிச்சயம் சுவாரஸ்யமானது. இந்தக் காரணங்களால் எனது வாக்கு ‘புட்போலுக்கே.’

உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ பறக்கும் பந்து பறக்கும்....’

# லிற்றோ வழக்கில் ஜனாதிபதியின் பெயர் சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிப்பு

லிற்றோ எரிவாயு ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவில் ஜனாதிபதியை பிரதிவாதியாக பெயரிடுவதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், அரசமைப்பின் 35(1) சரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கைத் தொடர முடியாது என சுட்டிக்காட்டினார்.

நாகானந்த கொடித்துவக்குவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான விசாரணை ஜனவரி 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர் தனது மனுவில், லிற்றோ காஸ் ஒப்பந்தம் வழங்காததில் முறைகேடு நடந்துள்ளதாக கூறி, அந்த ஒப்பந்தத்தை செல்லாது என உத்தரவிடக்கோரி தாக்கல் செய்திருந்தார்.

நாகானந்த கொடித்துவக்குவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், சட்டமா அதிபர், லிற்றோ குழுமத்தின் பணிப்பாளர் சபை உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2022இல் வெளியிடப்பெற்றது.